கடலூர் மாவட்டத்தில்

“மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாம்கள்!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தனர்!

கடலூர், பிப்.16- கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.என். பேட்டை பவானி அம்மாள் மெட்ரிக்குலேஷன் பள்ளி, சின்ன காரைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கம்பளிமேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூவாணிக்குப்பம் அரசினர் உயர்நிலைப் பள்ளி, தீர்த்தனகிரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாம்களை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணுபிரசாத் ஆகியோர் முன்னிலையில் துவக்கிவைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

தொடர்ந்து, தீர்த்தனகிரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற சமபந்தியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் பொதுமக்களுடன் உணவருந்தினர்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையிலும் பல்வேறு சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றார். குறிப்பாக பெண்கள் வளர்ச்சி அடைந்தால் தான் நாடு முன்னேற்றமடையும் என்ற வகையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முன்னோடி திட்டமாக பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் உள்ள சுமார் 7,78,296 குடும்ப அட்டைதாரர்களில் 4,50,134 குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- கலைஞர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் அன்றாடம் அரசு துறைகளை அனுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை எளிமைப்படுத்தும் வகையிலும், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்று சேரும் வண்ணம் “மக்களுடன் முதல்வர்” என்ற சிறப்பு திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை நகர்ப்புற பகுதிகளில் 60 முகாம்களும், 11.07.2024 முதல் 31.08.2024 வரை ஊரக பகுதிகளில் 91 முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், மூன்றாம் கட்டமாக தினந்தோறும் வேலைசெய்யும் கூலி தொழிலாளிகள், பொதுமக்கள் இம்முகாம்களில் கலந்துகொண்டு முதலமைச்சரின் காப்பீட்டு அட்டை, குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை திருத்தங்கள், உதவித்தொகை விண்ணப்பங்கள் உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அளித்து பயனடையலாம்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதுமுதல் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளின் உயர்கல்வியை ஊக்குவிப்பதற்காக மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவிப்பதற்காக மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தினையும் செயல்படுத்திவருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “மக்களுடன் முதல்வர் - முகாம் 3-ஆம் கட்டம்” என்ற சிறப்புத்திட்டத் தினை ஊரகப்பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டத்தில் மக்கள் இருக்கும் இடங்களிலேயே அனைத்து துறை அலுவலர்களுடன் முகாம்களை நடத்தி பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் 9 சட்ட மன்ற தொகுதிகளிலும் மொத்தம் 90 முகாம்கள் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் முகாம்கள் நடைபெறும் இடங்களுக்கு சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம்.

இம்முகாம்களில் தமிழ்நாடு மின்சார வாரியம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத்துறை, சுகாதார நலத்துறை, ஆதார் சேவைகள் முதலான துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு மனுக்களை பெறுகின்றனர். இம்முகாம்களில் இ-சேவை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் பதியப்படும் மனுக்களுக்கு 50 விழுக்காடு கட்டணம் மட்டுமே வசூல் செய்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணம் ஏதுமின்றி இலவசமாக சேவை வழங்கப்படுகிறது. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இன்றைய தினம் இம்முகாமில் சக்கர நாற்காலி கோரி மனுஅளித்த மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு உடனடியாக சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. மேலும், உடனுக்குடன் தீர்வு காணும் நிலையில் உள்ள மனுக்களுக்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா. சரண்யா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஷபானா அஞ்சும், குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், வடக்கு ஆர்.நாராயணசாமி, கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர் மாநகர பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், மூ. இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் கொளத்தூர் ஏரியின் முன்னேற்ற பணிகள் குறித்து நேற்று (15.2.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்து, ஏரியின் ஓரமாக வசிக்கின்ற 81 குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்குவது குறித்து உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

கொளத்தூர் ஏரியின் முன்னேற்றப் பணிகள் மற்றும்

ஏரியின் ஓரத்தில் வசிக்கும் 81 குடும்பங்களுக்கு மாற்று இடம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அலுவலர்களுடன் ஆய்வு!

சென்னை, பிப். 16 - வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் கொளத்தூர் ஏரியின் முன்னேற்ற பணிகள் குறித்து நேற்று (15.2.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்து, ஏரியின் ஓரமாக வசிக்கின்ற 81 குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்குவது குறித்து உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதல்வர் தலைமையிலே பொறுப்பேற்ற இந்த அரசு கிட்டத்தட்ட 45 மாத கால பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பெருநகர சென்னைக்கு தன்னுடைய சிந்தனையில் உதித்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே, அந்த வகையிலேயே ஏரிகளைப் புனரமைத்து அழகுபடுத்தி, காலையில் உடற்பயிற்சிக்கு ஏற்ற வகையில் அமைத்து, அதே போல் பொழுதுபோக்கிற்காக அந்த இடங்களை பூங்காக்கள் போல் வடிவமைத்து தருவதும், படிக்கின்ற குழந்தைகளுக்கும் கல்லூரியில் படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்கு ஏற்ற வகையில் அந்தப் பூங்காக்களில் மின் விளக்குகளை ஏற்பட..த்தி, இருக்கை வசதிகளோடு கட்டமைப்பு தருகின்ற பணிகளை தமிழ்நாடு முதல்வர் மேற்கொண்டத்தின் பயனாக கிட்டத்தட்ட 13 ஏரிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பணிகளை மேற்கொண்டு தற்போது அந்த பணிகள் நடைபெற்று கொண்டு வருகின்றன. இந்த 13 ஏரிகளுக்குண்டான தொகை 250 கோடி ரூபாய் செலவில் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஒரு பகுதி தான் இன்றைக்கு நாம் காலையிலே ஆய்வு செய்து இருக்கின்ற கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இந்த ஏரியாகும்.

இந்த ஏரியை அழகுபடுத்தி பெரும் வெல்ல மழைக்காலத்தில் அந்த ஏரிக்கு வருகின்ற தண்ணீரை, தண்ணீர் கொள்ளளவு அதிகரிக்கின்ற பொழுது ரெட்டில்ஸ் பகுதி வாயிலாக தணிகாசலம் கால்வாய்க்கு கொண்டு செல்வதற்கு வடிகால்வாய் வடிவமைப்பது குறித்து இன்றைக்கு களத்திலே எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி காகர்லா உஷா மேயர் திருமதி.ஆர். பிரியா, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சிஇஓ சிவஞானம், இந்த தொகுதியின் கண்காணிப்பு அலுவலர் கணேசன் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் பிரவீன்குமார் ஆகியோர் ஒருங்கிணைந்து ஆய்வினை மேற்கொண்டோம்.

இதில் கால்வாய் ஓரமாக இருக்கின்ற 81 வீடுகள் ஏற்கனவே கண்டறியப்பட்டு தமிழ்நாடு முதல்வர் அவர்களை அப்புறப்படுத்துவதற்கு ஒன்றரை ஆண்டுகள் முன்பே அனுமதி வழங்கி இருந்த நிலையில், அவர்களுக்கு மாற்று இடம் தந்த பிறகு தான் அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டு இருந்தார்கள். அந்த வகையில் அவர்களுக்கு எவ்வித கட்டணமும் இல்லாமல் மாற்று இடத்தை மூலக்கொத்தளம் பகுதியில் ஒதுக்கீடு செய்து, ராம்தாஸ் நகர் பகுதியில் அவர்களை அந்த பகுதியில் இருந்து மறுபடியும் மாற்று இடத்தை தேர்வு செய்த பிறகு சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பு உள்ள இந்தப் பகுதியையும் நடைபாதை பூங்கா போன்றவற்றை அமைத்து, மழைநீர் வருகின்ற நீர்வழி தடத்தை ஏற்படுத்தி, வெள்ளம் ஏற்படுகின்ற பொழுது நிரந்தர மாக இந்த பகுதியில் ஒரு பாதுகாப்பான சூழல் உருவாக்குவதற்கு திட்டமிட்டு இருக்கின்றோம். அந்த வகையில் இன்றைக்கு கால்வாயினை மேற்கண்டிருக்கின்றோம். இந்த பணிகள் அனைத்தும் 6 மாதத்திற்குள் திட்டமிட்டு முடிப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

கழிவுநீர் கலக்கின்ற சூழல் இருக்கின்ற குளங்களுக்கு, அதாவது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தேவைப்படுகின்ற ஏரிகள் இடத்தில், இந்த கட்டமைப்பை உருவாக்கி வருகின்றோம். உதாரணத்திற்கு ஆலந்தூர் ஏரியை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நானும் எனது துறையினுடைய செயலாளர் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்று ஆய்வு செய்தோம். அந்த ஏரியை பொறுத்தளவில் கழிவுநீர் கலக்கின்ற சூழல் இருப்பதால் அங்கு மறுசுழற்சி (Recycling) செய்கின்ற முறையில் சென்டரை நிறுவுவதற்குண்டான ப்ரோபோசல் தயார் செய்து கொண்டிருக்கின்றோம். எல்லா வகையிலும் ஏரியை உருவாக்குகின்ற பொழுது அந்த ஏரி மக்களுடைய பயன்பாட்டிற்கும் பெருவெள்ளம், மழையின் பொழுது ஏற்படுத்துகின்ற சூழலை உருவாக்கு வதற்காகவும் கட்டமைப்பை உருவாக்குவது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உடைய நோக்கம், அந்த வகையில் இந்த ஏரிகளை நாங்கள் முழுவதுமாக புனரமைத்த பிறகு கழிவுநீர் இதில் கலக்காத வண்ணம் எடுக்கப்படுகின்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவோம்.

13 ஏரிகளில் கிட்டத்தட்ட ஒன்பது ஏரிகளின் உடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக ஆலந்தூர் போன்ற ஏரிகளில் மறுகட்டமைப்பு வருகின்ற கழிவுநீர்களை மறுசுழற்சி செய்வதற்குண்டான இடம் தேர்வு நடந்து கொண்டிருக்கின்றன. இந்த 13 ஏரிகளும் முடிந்த அளவிற்கு 2025 டிசம்பர் மாத இறுதிக்குள் பணிகள் நிறைவுற்று இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மேயர் திருமதி. ஆர். பிரியா ராஜன் , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ. பிரவீன் குமார், வி.க.நகர் மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார் (சிஎம்டிஏ), பொதுப்பணி திலகம் (நீர்வள ஆதாரத் துறை), இளம்பருதி (தமிழ்நாடு நகர்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியம்), ராதாகிருஷ்ணன் (சென்னை குடிநீர் வழங்கல் துறை), மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ. எஸ்.முருகன், செயற்பொறியாளர்கள் ராஜன்பாபு, செந்தில்நாதன், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.சாரதா, திருமதி. தாவூத்பீ, திருமதி. அமுதா, திருமதி.ஸ்ரீதனி, உள்ளாட்சி பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாவட்ட கழக செயலாளர் என் கௌதமன் பங்கேற்பு!

நாகை நகராட்சியில் ரூ1.90 கோடி மதிப்பில் 10 கட்டிடங்கள்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

நாகை. பிப்.16- நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ளரூ ரூ. 1.90 கோடி மதிப்பில் 10 கட்டிடங்க கட்டடங்களை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாகளுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் நாகை சட்டமன்ற உறுப்பினர் முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் முன்னிலை வைத்தார்.

நிகழ்ச்சிகளில் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் வாழ்குடி ஊராட்சி தண்ணீர்பந்தல் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடத்தினையும், கோட்டூர் ஊராட்சி சடகோபன்மூலை கிராமத்தில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடத்தினையும், திருப்புகலூர் ஊராட்சி வவ்வாலடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ; ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், அகரகொந்தகை ஊராட்சி வாழ்மங்கலம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.46.40 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், உத்தமசோழபுரம் ஊராட்சி பூதங்குடி கிராமத்தில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடத்தினை நாகூரில் ரூ.10.86 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடம் மற்றும் பீரோடும் தெருவில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்காடி கட்டடத்தினையும், நாகை நம்பியார் நகரில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், நாகை தியாகராஜபுரம் மற்றும் கீரக்கொல்லைத்தெரு பகுதியில் தலா ரூ.21.00 இலட்சம் வீதம் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கூடம் உள்ளிட்ட கட்டடங்களையும் மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உமதி வாணன், மாவட்ட கழக அவைத் தலைவர் ப.செல்வம், பொருளாளர் மு.லோகநாதன், துணை செயலாளர் ஆரூர்.மணிவண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், க.மறைமலை, நாகை நகர கழக செயலாளர், நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன் ஆர்.டி.எஸ்.சரவணன், நாகூர் நகர கழக செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ்.ஈ.பழனியப்பன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.இளஞ்செழியன், மாவட்ட சார் பணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, எஸ்.பால்ராஜ், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, இளம் சுந்தர், குலோத்துங்கன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஜெபகர் சாதிக், கார்த்திகேசன்,சேகர் ஜெயலட்சுமி, செந்தில்நாதன், அமீர் ஜெகபர், பிரதீப், ஆர். ஆர்.பாரி, தமிழ்செல்வன்,கலைச்செல்வி, திருமருகல் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஜெயக்குமார், குமரவேல், ஜெயபால், செந்தில்குமார், சுமதி, திருமருகல் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் துரையரசன்,ஜெகபர்அலி, சோமு, நாகை நகர கழக நிர்வாகிகள் வெற்றிலை கடை சிவா, பி. திலகர், ஆர்.ரமணி, அபுபக்கர், சித்ரா குலோத்துங்கன், த இளைஞர் அணி அமைப்பாளர் ஏ எஸ் அருண், நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர். எஸ். சத்யன், மற்றும் அரசு அலுவலர்கள்; கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இரா. காளியப்பன்

பிப்ரவரி 16 (2008)

தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

தாம்பரம் மாநகர

தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தாம்பரம் மாநகர தி.மு.க செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம், 17.02.2025 திங்கட்கிழமை மாலை 04.00 மணிக்கு, **குரோம்பேட்டை லட்சுமி ஆண்டாள் திருமண மண்டபம் (பாலாஜி மருத்துவமனை எதிரில்)** மாநகர கழக அவைத் தலைவர், துணை மேயர் கோ.காமராஜ் தலைமையிலும், மாநகர கழக நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், பகுதி, வட்ட கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. மார்ச் 01 கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை மாநகரம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடுவது குறித்து.
2. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.

செயலாளர் - தாம்பரம் மாநகர தி.மு.க.